வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2412/ஆ1/2021 நாள் 06.08.2021

---

பொருள் : பள்ளிக் கல்வி – மாநில நல்லாசிரியர் விருது 2021–2022ம் கல்வியாண்டில் சிறப்பாக பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு டாக்டர்.இராதா கிருஷ்ணன் விருது 05.09.2021 அன்று வழங்கிட ஏதுவாக தகுதி வாய்ந்த தலைமையாசிரியர்/ஆசிரியர்களை தேர்வு செய்து அவர்கள் சார்பான கருத்துருக்கள் மூன்று நகல்களில் அனுப்ப கோருதல் – சார்பு.

பார்வை : 1.அரசாணை (1டி) எண்.122, பள்ளிக் கல்வித் (பொது) துறை , நாள் 03.08.2021
2. சென்னை–6, பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.29000/ஐ/இ1/2020, நாள் 04.08.2021

---

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறை ஆணைக்கிணங்க 2021–2022ம் கல்வியாண்டில் பாரத முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் திங்கள் 5ம் நாள் பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக ஆசிரியர் தின விழாவாகக் கொண்டாடப்பட்டு அவ்விழாவில் அரசு/ நிதியுதவி/ மெட்ரிக் / தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளில் சிறப்பாகப் பணிபுரியும் ஆசிரியர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு மாநில நல்லாசிரியர் விருதான "டாக்டர். இராதா கிருஷ்ணன் விருது" வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, 2021–22ம் ஆண்டிற்கான டாக்டர்.இராதா கிருஷ்ணன் விருதுபெற தகுதி வாய்ந்த தலைமையாசிரியர்கள்/ ஆசிரியர்கள் சார்பாக கருத்துருக்கள் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 12.08.2021க்குள் வேலூர், மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அரசு / அரசு நிதியுதவி/ மெட்ரிக் / தொடக்க/ நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பள்ளி முதல்வர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர் இராதாகிருண்ணன் விருது பெற பள்ளியிலிருந்து பெறப்படும் கருத்துருக்களை தொகுத்து அதன் பட்டியலினையும் கருத்துருகள் இரணடு நகல்களிலும் மேலும் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை முழுமையான வடிவில் தமிழ் Font 'மருதம்" (Marutham) Excel fontல் மட்டுமே தட்டச்சு செய்து (cd- ல் பதிவு செய்து CD உடன் இரண்டு நகல்களில் 13.08.2021க்குள் இவ்வலுவலகத்தில் தனி நபர் மூலம் பிரிவு எழுத்தரிடம் நேரில் சமர்ப்பிக்குமாறு வேலூர் மாவட்டக்கல்வி அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – விண்ணப்பம்
படிவம், சான்று –1

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள் / மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,
அரசு/ அரசு நிதியுதவி/ மெட்ரிக்/ தொடக்க/ நடுநிலை/ உயர்/ மேல்நிலைப்பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்

1) வேலூர், மாவட்டக்கல்வி அலுவலர் – தொடர் நடவடிக்கைமேற்கொள்ளும்பெருட்டு அனுப்பப்படுகிறது.
2) அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்

## <u>சான்று</u>

வேலூர் மாவட்டம் . . . . . . . . . . . . . . .. அரசு/ நிதியுதவி /மெட்ரிக்/தொடக்க/நடுநிலை/உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளில் . . . . . . . ஆசிரியராக பணிபுரியும் திரு/திருமதி . . . . . . . . . . என்பார் 2021–22ம் ஆண்டிற்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற விண்ணப்பித்துள்ளார்.

எனவே, அன்னார் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும் அன்னார் மீது குற்றவியல் நடவடிக்கைகள் ஏதும் இல்லை என சான்றளிக்கப்படுகிறது.

விண்ணபப்தாரர் கையொப்பம்

தலைமையாசிரியர் கையொப்பம்/
வட்டாரக்கல்வி அலுவலர் கையொப்பம்

மேலொப்பம்

மாவட்டக்கல்வி அலுவலர்